**OS.NO: 114/2024**

**PW1 :** இராஜா ராம், த/பெ.ஏழுமலை

**நாள்** : 12.02.2026

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>பிரதிவாதிகள் 1 முதல் 3 தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>:**

சர்வே எண்.687/1 –ல் உள்ள நிலம் குறித்து மட்டும் தான் எங்களுக்கும் பிரதிவாதிகளுக்குமிடைய பிரச்சனை உள்ளது என்றும் மற்ற சொத்துக்கள் குறித்து எந்த பிரச்சனையும் இல்லை என்று சொன்னால் அனைத்து சொத்துக்களிலும் பிரச்சனை உள்ளது.

1995–க்கு முன்பாக மற்ற சொத்துக்களின் ஒரு பகுதியை துக்காராம் அனுபவித்து வந்தார். பிறகு எனது தந்தையிடம் கேட்டு வேறு பக்கம் பயிர் செய்ய துக்காராம் கேட்டதன் அடிப்படையில் மாற்றிக்கொண்டார். அவ்வாறு மாற்றி கொண்ட பிறகு துக்கா ராம் பயிர் வைத்த நிலம் போக மற்றொரு பக்கத்தில் எனது தந்தை பயிர் வைத்து வந்தார்.

எனது தாத்தா காலத்தில் 1995–க்கு முன்பாக அனுபவித்த பகுதிகளை அவரவர் அவ்வாறு அனுபவித்து வந்தார்கள் என்று சொன்னால் சரிதான்.

அவரவர் அனுபவித்த பகுதியில் வந்த வருமானத்தை அவரவர்கள் எடுத்துக் கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான்.

இந்த வழக்கில் சர்வே எண்.489, 490 ஆகிய இரண்டையும் பற்றி கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். மேற்படி சொத்துக்கள் 07.02.1972 –ம் ஆண்டு மார்க சகாயப்பிள்ளை எனது தந்தைக்கும், எனது சித்தப்பா துக்காராமன் பெயரிலும் எழுதி வைத்த உயில் ஆவணத்தின் மூலமாக கிடைக்கப்பெற்றதாக கூறியுள்ளோம். மேற்படி மார்க சகாயப்பிள்ளை என் தந்தையினுடைய தாய் வழி தாத்தா ஆவார்.

அதனால் அது எங்களது பூர்விக சொத்து இல்லை என்று சொன்னால் சரிதான். அது உயில் படி வந்த தனிச்சொத்தாகும். அந்த சொத்தை எனது தந்தையினுடைய தாய் வழி சித்தியான இலட்சுமியம்மாளுக்கு பரிவர்த்தனை செய்து வேறு நிலங்களை வாங்கிக்கொண்டு உயிலில் கண்ட சொத்தை அவர்களுக்கு கொடுத்து விட்டார்கள். அந்த வேறு நிலங்களை தாவா சொத்தில் 12 முதல் 16 அயிட்டங்களாக காண்பித்துள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

ஆகையால் மேற்படி 12 முதல் 16 அயிட்ட சொத்துக்கள் எனது தந்தை மற்றும் சித்தப்பாவின் பூர்வீக சொத்துக்கள் இல்லை என்று சொன்னால்

சரிதான். இந்த வழக்கில் 14 வது அயிட்ட சொத்து என் தந்தை ஏழுமலை பெயருக்கு பட்டா எண். 64 வழங்கப்பட்டிருந்தது என்று சொன்னால் சரிதான். அந்த பட்டாவை ஏழுமலைக்கு பிறகு அவரது மனைவி மற்றும் மகள் மற்றும் மகன்கள் பெயரில் மாற்றிக்கொண்டோமா என்றால் ஆமாம். அதன் நகல் தான் என்னிடம் காண்பிக்கப்படும் பட்டா நகலா என்றால் ஆமாம் அது **பி.வா.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அயிட்டம் 12, 13, 15, 16 சொத்துக்கள் பழைய பட்டா எண். 781 –ல் துக்காராம் பெயருக்கு வழங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல அயிட்டம் எண்.14 உடன் சேர்ந்து எனது தந்தை பெயரில் கூட்டு பட்டாவாக அதே பட்டா எண் 781 ஆக வழங்கப்பட்டிருந்தது.

மேற்படி தகவலை நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். அதே போல் பழைய கூட்டு பட்டா எண். 781–ஐ இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

சர்வே எண்.435/83–ல் தாவா அயிட்ட சொத்து 25 –ல் ஒரு கிணறு இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன். அதன் பட்டா எண்.1119 என்று கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். பட்டா எண். 1119–ஐ இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வாதசாஆ.13 ஆக தாக்கல் செய்துள்ளேன்.

மேற்படி வாதசாஆ.13–ஐ எனது தந்தையின் வாரிசுகளான எங்கள் பெயரிலும் மற்றும் எனது சித்தப்பா துக்காராமின் பெயரிலும் மற்றும் 5 வெளியாட்கள் பெயரிலும் வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி வெளியாட்கள் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

மேற்படி கிணற்றில் எங்களுக்கு குறிப்பிட்டு எவ்வளவு பாகம் உள்ளது என்று எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அது பூர்வீக சொத்தாகும்.

மேற்படி பூர்வீக கிணற்றில் எனக்கும் எனது சித்தப்பா துக்காராமிற்கும் 4 ல் 1 பாகம் இருப்பதாக கூறுகிறேன். நான் கூறுவது தவறு என்றும் 3 ல் 1 பாகத்தில் 4 ல் 1 பாகம் தான் என்று பிரதிவாதிகள் கூறுகிறார்கள் என்று சொன்னால் சரிதான்.

சர்வே எண்.412/1–ல் உள்ள கிணறு பொது பட்டா 786–ல் உள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த கிணற்றில் தான் மின் இணைப்பு எண் 192–ம், 3 குதிரைத்திறன் கொண்ட மோட்டார் பம்பு செட்டும் உள்ளது என்று சொன்னால் சரிதான்.

மேற்படி மின் இணைப்பும், பம்பு செட்டும், கிணறும் எனது தந்தைக்கும் எனது சித்தப்பாவிற்கும் பொதுவானது என்று சொன்னால் சரிதான்.

அந்த கிணறையும், மின் இணைப்பையும், மோட்டர் பம்பு செட்டையும் இந்த வழக்கில் நாங்கள் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

மார்க சகாயப்பிள்ளை எழுதி வைத்த உயிலில் சர்வே எண். 424/1-ல் 1 ஏக்கர் 70 சென்ட்டில் 85 சென்ட் நிலம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்றும் அந்த சொத்தையும் இந்த வழக்கில் சேர்க்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த 85 சென்டில் எனது தந்தைக்கு 42.5 சென்டும் துக்காராமிற்கும் 42.5 சென்டும் உரியது என்று சொன்னால் சரிதான்.

என் மாமனார் பெயர் ரவிந்திரன். அந்த நிலத்திற்கு பட்டா ரவிந்திரன் பெயரில் தவறுதலாக வழங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. கூட்டு பட்டாவக தான் வழங்கப்பட்டது அதில் எனது மாமனாருக்கும் உரிமை உள்ளது.

மேற்படி 1 ஏக்கர் 70 சென்டில் எனது தந்தைக்கும் எனது சித்தப்பா துக்காராமிற்கு போக மீதமிருந்த 85 சென்ட் யாருடையது என்றால் வரதப்பிள்ளை, கொள்ளாபுரிப்பிள்ளை மற்றும் ரவிந்திரன் வகையறா ஆகியோருக்கு உரிமையுடையது.

அதில் வரதப்பிள்ளைக்கு எவ்வளவு பங்கு கொள்ளாபுரிக்கு எவ்வளவு பங்கு, எனது மாமனாருக்கு எவ்வளவு பங்கு என்று கேட்டால் அது அவர்களது சொத்து அதனால் அவர்களுடைய பங்கை பற்றி எனக்கு தெரியாது.

85 சென்டில் 42.5 சென்ட் தெற்கு பக்கத்தில் அனுபவித்தார் என்றும், துக்காராம் வடக்கு பக்கத்தில் 42.5 சென்டு அனுபவித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல 85 சென்ட்டும் பொதுவாக தான் இருந்தது.

பிரதிவாதி அவருடைய பதிலுரையில் பத்தி 22-ல் கூறிய பிறகும் மேற்கூறிய விவரத்தை பிரமாண வாக்குமூலத்தில் நான் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். அதனால் இந்த சொத்தில் மற்ற 3 நபர்களுக்கும் பங்கு இருப்பதாக கூறுகின்ற விவரமும் தவறு என்றும் அவைகள் பாகம் பிரியாமல் உள்ளது என்று கூறுகின்ற விவரமும் தவறு என்று சொன்னால் சரியல்ல.

மேற்படி 85 சென்ட்டை வழக்கில் 29 வது வரிசை எண்ணில் சேர்த்திருக்கிறேன். ஆனால் அந்த 85 சென்டிற்கு நான் குறிப்பிட்டு சக்கு பந்தி குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். அது 1 ஏக்கர் 70 சென்ட் மொத்தமாக உள்ளது.

ஆகையால் மேற்படி 85 சென்டில் எங்களுக்கு பாகம் ஒதுக்கவேண்டும் என்றால் மீதமுள்ள 85 சென்டின் உரிமையாளர்களையும் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டும் என்று சொன்னால் சரிதான்.

ஆனால் அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். ஆகையால் இந்த பாகப் பிரிவினை வழக்கு உரிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

மற்றொரு சொத்தான சர்வே எண்.511/3 -ல் 47 சென்ட்டில் 23.5 சென்ட்டும் சர்வெ எண். 514 -ல் 2 ஏக்கர் 15 சென்டில் 7.5 சென்ட்டும் எனது தந்தைக்கும், துக்காராமிற்கும் உரியது என்றும் அவைகளை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். சர்வே எண். 435/42 -ல் 20 சென்டில் 4 சென்டு மட்டும் அயிட்ட எண்.30 ஆக சேர்க்கப்பட்டுள்ளது. மேற்கண்ட 2 அயிட்ட சொத்துக்களை எப்போதோ விற்று விட்டோமா அல்லது பரிவர்த்தனை செய்து கொண்டார்களா என்று எனக்கு தெரியவில்லை.

மேற்படி சர்வே எண். 511/3 மற்றும் சர்வே 514 ஆகியவை யார் வசம் உள்ளது என்றால் கண்ணப்பிள்ளை வகையறா விடம் உள்ளது.

இந்த வழக்கின் பிரதிவாதி சர்வே எண்.511/3 லோகநாதன் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் அது யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது.

அந்த லோகநாதன் எனது மாமனார் ரவிந்திரனின் தம்பி என்றால் சரிதான். மற்றொரு சர்வே எண்.435/42 கஜராஜ் மற்றும் அர்ஜீனன் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

அந்த பட்டாக்கள் எப்போது வழக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. மேற்படி விவரங்களை பிரதிவாதி அவருடைய எதிருரையில் கூறிய பிறகும் மேற்படி அயிட்ட சொத்துகளில் எங்களுக்கு உரிமை உள்ளது என்றோ, அல்லது உரிமை இல்லை என்றோ, அல்லது வெளியாட்களுக்கு பரிவர்த்தனை அல்லது கிரையம் செய்து விட்டதாகவோ எந்த தகவலையும நான் என்னுடைய பிரமான வாக்குமூலத்தில் கூறவில்லை என்று சொன்னால் எனக்கு தெரிந்த விவரங்களை மட்டும் கூறியுள்ளேன் தெரியாத விவரத்தை கூறவில்லை.

பதிலுரையில் பிரதிவாதிகள் கூறிய பிறகு மேற்படி அயிட்ட சொத்துக்களுக்கு வில்லங்க சான்றிதழை வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை.

கடந்த 7 ஆண்டுகளாக மேற்படி அயிட்ட சொத்துக்கள் யார் வசம் உள்ளது யார் யார் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்பது பற்றி நான் விசாரித்து தெரிந்துக் கொண்டேனா என்றால் விசாரித்தேன்.

விசாரித்து தெரிந்து கொண்ட நபர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி உயிலில் மூன்று வீட்டு மனைகள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரிதான். அந்த மூன்று வீட்டு

மனைகளை இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளதா என்றால் சேர்க்கப்பட்டுள்ளது.

அவைகளை வரிசை எண். 31 -ல் 1 முதல் 3 அயிட்டங்களாக சேர்த்துள்ளேன். அதில் தெற்கு பக்கமாக ஏழுமலை பிள்ளையும் வடக்கு பக்கமாக துக்காராமும் வைத்துக்கொண்டாரா என்றால் இல்லை பொதுவாக தான் உள்ளது பாகம் பிரிக்கவில்லை.

இந்த வழக்கில் 23 வது அயிட்டமாக காண்பித்துள்ள சர்வே எண். 416/43 இல் 60 சென்ட் எங்களுக்கு உரிமையானது என்று கூறுவதற்கு ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. அது பூர்வீகம் தான்.

சர்வே எண். 416/43 க்கு பட்டா யார் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் கூட்டு பட்டாவாக உள்ளது. யார் யார் பெயரில் கூட்டு பட்டா உள்ளது என்றால் அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை. அந்த கூட்டு பட்டாவை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேன்.

வாதசாஆ.12 தான் நான் கூறிய சர்வே எண். 416/43 கான கூட்டு பட்டாவா என்றால் ஆமாம். அதில் மொத்த விஸ்திரனம் 0.64.5 ஏர்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான்.

அதில் எங்களுக்குரியதாக கூறும் 60 சென்டிற்கான சக்கு பந்தியை பற்றி கூறவில்லை என்று சொன்னால் சரிதான். ஆவணம் ஏதுவும் தாக்கல் செய்யதாக நிலையில் மேற்படி சர்வே எண்ணில் எங்களுக்கு 60 சென்ட் பாக உரிமை இருப்பதாக கூறுவதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

பிரதிவாதி மேற்படி சர்வே எண்ணில் 2 சென்டு தான் பாத்தியமானது என்றும் அந்த 2 சென்ட்டும் வாய் மொழியாக ஏழுமலை பிள்ளைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

அயிட்டம் எண்.24 -ல் குறிப்பிட்டுள்ள 282 சதுர மீட்டர் இடத்தை மட்டும் தான் குறிப்பிட்டுள்ளோம் என்று சொன்னால் சரிதான். அதில் ஒரு ஓடு வீடும், மாடி வீடும் இருந்தது என்று சொன்னால் சரிதான். அவைகள் இடிந்து போய்விட்டது. அதன் இடிபாடுகளின் சுவர்கள் இன்றும் உள்ளது என்று சொன்னால் சரிதான். கிழக்கு மற்றும் மேற்கே உள்ள சுவர்கள் மட்டும் தான் உள்ளது. மற்ற சுவர்கள் அனைத்தும் இடிந்துவிட்டது.

மேற்படி இடத்திற்கான பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் தணிகாச்சலம், துக்காராம் மற்றும் ஏழுமலை பெயர்களில் உள்ளது. மேற்படி தணிகாச்சலம் என்பவர் கோவிந்தப்பிள்ளையின் மகன் என்று சொன்னால் சரிதான்.

ஆகையால் 282 சதுர மீட்டரில் வடபகுதி ஏழுமலைக்கும், துக்காராமிற்கும் உரிமையானது என்றும், தென்பகுதி கோவிந்தப்பிள்ளைக்கு உரிமையானது என்று சொன்னால் சரிதான். மனைக்கு தெற்கே தெரு உள்ளது. அந்த தெருவில் இருந்து முழு அகலத்திற்கும் ஒரே வீடாக இருந்தது, நடுவே பொது வழி வீட்டிற்குள்ளேயே இருந்தது.

வீட்டிற்குள்ளேயே இருந்த வழிக்கு இரு பக்கங்களில் கிழக்கேயும், மேற்கேயும் அறைகள் இருந்தது. அந்த வீட்டிற்கு பின்புறம் (வடக்கு) இருந்த இடத்தில் மாட்டு கொட்டகை இருந்தது மீத இடம் காலியாக இருந்தது.

கோவிந்தப்பிள்ளை மகன் தணிகாச்சலம் பாகத்தை நாங்கள் கிரையம் வாங்கி விட்டோம். மேற்படி கிரையம் பதிவாகாத ஆவணத்தின் மூலமாக கிரையம் பெற்றேன். அந்த பதிவாகாத ஆவணத்தில் தேதியை குறிப்பிட்டு என்னால் கூறமுடியுமா என்றால் தேதி ஞாபகம் இல்லை ஆனால் 1998-ல் கிரையம் பெற்றேன். அந்த ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை.

அந்த ஆவணத்தை தாக்கல் செய்தால் நாங்கள் கோவிந்தப்பிள்ளையின் பாகத்தை வாங்கிய விவரம் பற்றி தெரியவரும் என்று சொன்னால் சரிதான். 282 சதுர மீட்டரில் பாதியில் ஏழுமலைக்கும், துக்காராமிற்கும் பாதி பாகம் உள்ளது. மீதி பாதி பாகம் எங்களுக்கு உரிமையானது. அந்த விவரத்தை இந்த வழக்கில் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.02.12 17:40:37 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.